<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 171/2022

அரசுதரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராமலிங்கம் | வயது | : | 61 |
| தந்தை/ கணவர் பெயர் | : | கண்ணுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.03.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கடந்த 30.09.2024 அன்று பணிஓய்வு பெற்று தற்போது விருத்தாசலத்தில் வசித்து வருகிறேன். நான் மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது எனக்கு உதவியாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சகிதம் 10.12.2018 ந் தேதி அதிகாலை 06.45 மணிக்கு தொட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் குற்ற நடத்தை காரர்களை கண்காணிக்கும் போது அங்கு வந்த இரட்டை மாட்டு டயர் வண்டியை தாங்கள் நிறுத்தி தணிக்கை செய்தபோது மேற்படி வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்தது. மேற்படி வண்டியை ஓட்டி வந்தவரை பற்றி தாங்கள் விசாரிக்க அவரது பெயர் ராஜீவ்காந்தி (28) த/பெ. ராஜேந்திரன் மெயின் ரோடு M.பட்டி விருத்தாசலம் தாலுக்கா என்றும்

மணிமுத்தாற்றில் மணல் ஏற்றிவர எந்தவிதமான அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் தன் சுய லாபம் கருதி விற்பனைக்காக திருடி வந்துள்ளார் என்றும் தெரியவந்ததால் கைதுக்கான காரணம் கூறி 07.00 மணிக்கு கைது செய்தேன். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் உடன் வந்த போலிசார் சாட்சிகள் முன்னிலையில் போலிஸ் மகசரில் 07.15 மணிக்கு டயர்வண்டியும் 1/2 யூனிட் ஆற்றுமணலையும் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எதிரி திரும்ப இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்றதை விற்றுவிட்டதாக எதிரி கூறினார். பின் எதிரி மற்றும் தடையம் சகிதம் 08.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியின் மீது 265/18 U/S 21(1) MINES & MINARAL ACT & 379, 430 IPC ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 2.** பின்பு எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். தடயத்தினை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். படிவம் 91 **அ.த.சா.ஆ.3** கைப்பற்றிய மணலை வருவாய் வட்டாட்சியர் விருத்தாசலம் அவர்களிடம் ஒப்படைத்து சான்று பெற்றேன். அந்த சான்று **அ.த.சா.ஆ.4** ஆகும். இறுதியாக எனது விசாரணை முடித்து எதிரி மீது இறுதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

இந்த வழக்கு சம்பந்தமாக மணல் எடுத்ததால் பாதிப்பு ஏற்பட்டதாக பொது மக்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை.

அ.சா.1, அ.சா.2 இருவரும் எனக்கு கீழ் பணி புரியும் காவல் நிலைய சாட்சிகள் என்றால் சரிதான். மணல் எடுத்தது அரசு இடமா அல்லது தனியார் இடமா என்ற சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் ஆற்றில் மணல் எடுத்தார். அரை யூனிட் மணல் என்று எப்படி அளவீடுசெய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மணல் அள்ளியதை நேரடியாக பார்த்ததாக பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்த இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் , வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். புள்ளிவிவரக்கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி கைதுசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தான வாகனத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.